Registered as a Newspaper
விலை ரூ. 50 பக்கங்கள் 12

# உதயன்

சுடர் : 38
கதிர் : 107
திங்கட்கிழமை 13 மார்ச் 2023
மாசி 29 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## எரிபொருள் விலை ஏப்ரலில் குறையும்!

### அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 13
அடுத்த மாதம் இடம்பெறவுள்ள விலைத் திருத்தத்தில் மக்களுக்கு நிவாரணம் வழங்க எதிர்பார்த்துள்ளதாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

»11

# தனிநாடு கோருவதை குற்றமாகக் கருதக்கூடாது

## அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திடம் நேற்றுக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 13
பொருளாதாரப் பிரச்சினையாலும், சிறிலங்கா அரசின் அடக்குமுறையாலும் பாதிக்கப்பட்டுள்ள தென்பகுதி சிங்களத் தரப்பினர், தற்போது வடக்கு – கிழக்கு தமிழ் மக்களை அணுகத் தொடங்கி உள்ளனர். அவ்வாறு அணுகும் எந்தத் தரப்பினரும் தமிழ் மக்களின் பிரச்சினையின் அடிப்படைகளைப் புரிந்துகொள்வதுடன் தனிநாடு கோருவதைத் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதும் 6ஆம் திருத்தச் சட்டத்தை நீக்குவது உள்ளிட்ட 10 விடயங்களில் தமது உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தவேண்டும் – என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரியுள்ளது.

»11




"அடுத்த மாசம் பெற்றோலை 5 ரூபாவால குறைச்சிட்டு அதுக்கடுத்த மாசம் அம்பது ரூபாவால கூட்டுறதுதான் உவையின்ர ஐடியா போல"

# இனவழிப்பு போரே நெருக்கடிக்கு காரணம்

## ஏற்றுக்கொண்டார் வசந்த முதலிகே

யாழ்ப்பாணம், மார்ச் 13
இலங்கையில் இடம்பெற்ற இன வழிப்புப் போரே பொருளாதார நெருக்கடிக்கு பிரதான காரணி என்பதை ஏற்றுக்கொள்வதாக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே தெரிவித்தார்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துடனான

»10

## தபால்மூல வாக்களிப்பு மீண்டும் தள்ளிப்போகும்

கொழும்பு, மார்ச் 13
நாளை மறுதினம் புதன்கிழமைக்குள் திறைசேரி 500 மில்லியன் ரூபாவை வழங்காவிட்டால்

»11

## உள்ளூராட்சிசபைத் தேர்தல்: முடிவு நாடாளுமன்றத்திடமே!

### ரணில் விடாப்பிடி




கொழும்பு, மார்ச் 13
மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட அதியுயர் சபையான நாடாளுமன்றமே உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில்

»11

## வடமாகாணத்தில் ஒரு வருடத்தில் 2,500 மில்லியன் ரூபாவுக்கு குடிதண்ணீர் விற்பனை

விரிவு:- பக்.10



## ஆனையிறவில் 27அடி உயர நடராஜர் சிலை

கிளிநொச்சி, மார்ச் 13
கிளிநொச்சி - கரைச்சி பிரதேச சபைத் தீர்மானத்துக்கு அமைவாக நடராஜர் பணி குழுவினால் ஆனையிறவுப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட 27 அடி உயரமான நடராஜர் சிலை நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. இலங்கையில் உள்ள நடராஜர் சிலைகளில் இதுவே மிகப்பெரியது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஓ,113)

## தேர்தல் குழப்பத்துக்கு மத்தியிலும் மஹிந்த பரப்புரை!

கொழும்பு, மார்ச் 13
உள்ளூராட்சித் தேர்தல் திட்டமிட்டவாறு நடைபெறுவது சந்தேகம் என்ற கருத்து வலுப்பெற்று வரும் நிலையிலும், சிறிலங்கா

»10

## போராட்டக்காரர்களோடு சேர்ந்து காடையர்களும் களமிறக்கமாம்

கொழும்பு, மார்ச் 13
ஆர்ப்பாட்டக்காரர்களுக்குள் சில காடையர்களும் மறைந்திருந்து செயற்படுகின்றார்கள். அந்தக் காடையர்களும் அவர்

»11

## திருடப்பட்ட மோ.சைக்கிள் உடுவிலில் நேற்று மீட்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 13
யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் சுன்னாகம் பொலிஸாரால் உடுவில் பகுதியில் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.
நாச்சிமார் கோவில் பகுதியிலுள்ள வீட்டின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஊடகவியலாளர் ஒருவரின் மோட்டார் சைக்கிள் நேற்று முன்தினம் திருடப்பட்டமை தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

»11

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சர்வாதிகார அரசாங்கம்தான் தேர்தலைக் கண்டு அஞ்சும்!

## அநுரகுமார ஆவேசம்

கொழும்பு, மார்ச் 13

ஒருநாட்டில் சர்வாதிகார அரசு தேர்தலைக் கண்டு அஞ்சியே தீரும். அதை தற்போதைய அரசு நிரூபித்துக் காட்டியுள்ளது என்று ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.



நாடாளுமன்றத்தில் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான இரண்டாம் நாள் சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தேர்தலை மக்கள் கேட்கவில்லை என்று அரச தரப்பினர் கூறுகின்றனர். ஆனால், அதை மக்கள் கேட்கத் தேவையில்லை. அது அரசமைப்பு ரீதியில் நடத்தப்படவேண்டியதே.

மக்கள் தேர்தலைக் கேட்கவில்லை என்று கூறுபவர்கள் தேர்தலை நடத்தப் பணம் இல்லை என்றும் கூறுகின்றனர். இந்த நேரத்தில் இப்படி பணமில்லை என்று தேர்தல் நடக்காவிட்டால் ஜனாதிபதித் தேர்தலுக்கும் இப்படிக் கூறிக்கொண்டு திறைசேரியைச் சீர்குலைத்து ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் பதவியில் இருக்கலாம்.

இவர்கள் பணம் இல்லாத பிரச்சினையால் தேர்தலை நடத்த முடியாது என்று கூறவில்லை. தேர்தல் முடிவுகளுக்கு அச்சமடைந்தே அவ்வாறு அவர்கள் கூறுகின்றனர். பணமில்லை என்று கூறும் கதை பொய்யாகும். உள்ளூராட்சிசபைகளில் 8 ஆயிரம் உறுப்பினர்கள் அதிகம் என்றும், அதைக் குறைக்கவேண்டும் என்றும் கூறிக்கொண்டு தேர்தலை ஒத்திவைக்கவும் முயற்சிக்கின்றனர். 8 ஆயிரம் உறுப்பினர்களுக்குச் செலவு என்றால் உறுப்பினர்களுக்கான செலவை அரைவாசியால் குறைக்கலாம், அவர்களின் கொடுப்பனவைக் குறைக்கலாம். இந்த நேரத்தில் அரசும் சரியான மக்கள் ஆணையுடன் இல்லை. தேர்தலில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவானவர்கள் ஒவ்வொரு பக்கத்தில் இருக்கின்றனர்.

இதனால் மக்கள் நிலைப்பாட்டை அறிந்துகொள்ளவேண்டியுள்ளது. உள்ளூராட்சிசபைத் தேர்தலைக் கொண்டு இதனை அறிந்துகொள்ளலாம் - என்றார். (எ-22)

## அரசுக்கு எதிராகப் போராடினால் அரச வேலைவாய்ப்பு இரத்து!

### அரசாங்கம் தீர்மானம்

கொழும்பு, மார்ச் 13

அரசாங்கத்துக்கு எதிராகப் போராடும் மாணவர்களின் தரவுகள் பேணப்பட்டு எதிர்காலத்தில் அவர்களை அரச சேவையில் இணைத்துக்கொள்ளாது விடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர் குழுவொன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியது.

அந்தச் சந்திப்பில் கட்சி விவகாரங்கள் மற்றும் நாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் ஆராயப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலின்போதே அரசாங்கத்தால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டம் மற்றும் அரச விரோதச் செயல்களில் ஈடுபடுவோர் அடையாளம் காணப்பட்டு அவர்கள் பற்றிய பதிவுகள் பேணப்படவேண்டும் என்றும், பின்னர் அரச சேவையில் அவர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படுகையில் தகுதியானவர்களாகக் கருதப்படுவதற்கான அடிப்படை ஆவணமாக அது பயன்படுத்தப்படவேண்டும் என்றும் அந்தக் கலந்துரையாடலில் ஆலோசிக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகிறது. (ச-இ)

## நாட்டின் பல பாகங்களிலும் காற்றுமாசு மீள அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 13

நாடளாவிய ரீதியில் பல மாவட்டங்களில் வளிமாசடைவு மீண்டும் அதிகரித்துள்ளது. கொழும்பு மாவட்டத்தில் அதிக மாசுபாடு பதிவாகியுள்ளது என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அந்த நிறுவனம் வெளியிடப்பட்ட அறிக்கையில் உள்ளதாவது:-

கொழும்பில் காற்றுத் தரக்குறியீடு 712 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி காற்றுமாசு இளம் ஊதா நிறத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இது கடும் சுகாதாரமற்ற நிலையைக் காண்பிக்கின்றது. அடுத்ததாக மன்னார் மாவட்டத்திலேயே காற்றின் தரம், காற்றின் தரக்குறியீடுகள் 103 ஆகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவைதவிர பதுளை, காலி, புத்தளம் மற்றும் பொலநறுவை ஆகிய நகரங்களிலும் வளி மாசடைவு ஏனைய நாள்களுடன் ஒப்பிடும்போது சற்று அதிகமாகக் காணப்படுகிறது. வளிமாசடைவு காரணமாக வெளியிடங்களுக்குச் செல்பவர்கள் முகக்கவசம் அணிந்து செல்வதுடன் சுவாசநோய் உள்ளவர்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறும் அறிவுறுத்தப்படுகிறது - என்றுள்ளது. (ச-இ)

## எரிபொருள்களின் விற்பனை வீழ்ச்சி

கொழும்பு, மார்ச் 13

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் விற்பனை கடந்த 13 மாதங்களில் குறைவடைந்துள்ளது என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தனது ருவிற்றர் பதிவில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு தொடக்கத்தில் லங்கா ஓட்டோ டீசல் விற்பனை 50 வீதமாகவும், பெற்றோல் விற்பனை 30 வீதமாகவும், மண்ணெண்ணெய் விற்பனை 70 வீதமாகவும் குறைந்துள்ளது.

கியூ.ஆர். முறைமை மற்றும் அதிகரித்த விலை உள்ளிட்ட காரணங்களால் கொள்வனவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

## சட்டத்துக்கு முரணான வகையில் வீடுடைத்த இரண்டு பேர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 13

சாவகச்சேரிப் பகுதியில் சட்டத்துக்கு முரணாக உள்நுழைந்து வீடொன்றை உடைத்துத் தரைமட்டமாக்கிய குற்றச்சாட்டில் பெண் உட்பட இருவர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டனர் என்று சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜே.சி.பி. இயந்திரத்தைப் பயன்படுத்தி வீடு உடைக்கப்பட்டுள்ளது என்றும் காணி உரிமைப் பிரச்சினையே சம்பவத்துக்கான காரணம் எனவும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதையடுத்து அனுமதியின்றி சட்டவிரோதமாக வீடுடைத்த குற்றச்சாட்டில் பெண் உட்பட இரு சந்தேக நபர்களைப் பொலிஸார் கைது செய்தனர். அத்துடன் வீடுடைக்கப் பயன்படுத்திய ஜே.சி.பி. இயந்திரத்தையும் பொலிஸார் கைப்பற்றினர். (ம-14-20)

## சீன சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்குப் படையெடுப்பு

கொரோனாத் தொற்றின் பின்னர் சீனாவின் ஷங்காய் நகரிலிருந்து முதன்முறையாக சீன சுற்றுலாப் பயணிகள் குழுவொன்று இலங்கைக்கு வந்துள்ளது. 181 சீன சுற்றுலாப் பயணிகளைக் கொண்ட இந்தக் குழு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை நேற்று வந்தடைந்துள்ளது. இந்தக் குழு 7 நாள்கள் இலங்கையில் தங்கவுள்ளது. முன்னதாக குவாங் சோவிலிருந்து 117 சுற்றுலாப் பயணிகளைக் கொண்ட குழுவொன்று இலங்கைக்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# அமெ. நிகழ்ச்சி நிரலில் இயங்குகிறது இந்தியா!

## ஐக்கிய சோஷலிஸக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 13

அமெரிக்கா தனது நிகழ்ச்சி நிரலை இலங்கையில் நிறைவேற்றுவதற்கு இந்தியாவைக் கைக்கூலியாகப் பயன்படுத்துகின்றது என்று ஐக்கிய சோஷலிஸக் கட்சியின் பொதுச் செயலாளர் சிறிதுங்க ஜெயசூரிய தெரிவித்தார்.

யாழ்ப்பாண ஊடக அமையத்தில் நேற்று ஊடகச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அமெரிக்கா தனது நிகழ்ச்சி நிரலை இலங்கையில் நிறைவேற்றுவதற்கு இந்தியாவைக் கைக்கூலியாகப் பயன்படுத்துகின்றது. இந்த நிகழ்ச்சி நிரலிலேயே இலங்கையில் இந்தியா தனது செயற்றிட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்றது. இந்தியாவின் அதானி குழுமத்தின் சில செயற்றிட்டங்கள் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டங்களை முன்னெடுக்கும் அதானி இந்தியப் பிரதமர் மோடியின் வலதுகை. சீனாவை ஓரங்கட்டிய சில திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அமெரிக்காவின் நிகழ்ச்சிநிரல் திட்டங்கள் தற்பொழுது இந்தியா மூலம் மேற்கொள்ளப்படுகின்றன - என்றார். (எ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புற்றுநோய் விழிப்புணர்வு; இன்று நடைபவனி

யாழ்ப்பாணம், மார்ச் 13

புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிவது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தவும், புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவைக் காட்டவும் யாழ்ப்பாணத்தில் இன்று திங்கட்கிழமை நடைபவனி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் புற்றுநோய் பிரிவின் ஏற்பாட்டில் இருநூறாவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் யாழ். பரியோவான் கல்லூரியுடன் இணைந்து இந்த நடைபவனி மேற்கொள்ளப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியில் இருந்து ஆரம்பிக்கும் பேரணி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை வீதி ஊடாகப் பயணிக்கும் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நடந்த ஊடக சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது.

சந்திப்பில் யாழ்.போதனா மருத்துவமனை பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி, யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி அதிபர் துசிதரன், யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி இ.சுரேந்திரகுமாரன், புற்றுநோய் சத்திரசிகிச்சை நிபுணர் க.சிறீதரன், பெண்களுக்கான புற்றுநோய் சத்திரசிகிச்சை நிபுணர் தனுஜா ஆகியோர் பங்கேற்றனர். (எ)

## சட்டவிரோத மணல் அகழ்வு: ஒருவர் கைது

கொடிகாமம், மார்ச் 13

சாவகச்சேரியில் அறுகுவெளிப் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட ஒருவரை சாவகச்சேரி பொலிஸார் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கைதுசெய்துள்ளனர்.


குறித்த பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுகிறது எனக் கிடைத்த தகவலுக்கமைய இந்தக் கைது முன்னெடுக்கப்பட்டது.

மணல் அகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்ட டிப்பர் வாகனமும் பொலிஸாரால் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

சந்தேகநபரை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர். (ச-159)







# மாதகல் கடற்கரையில் முரல் மீன் திருவிழா!

**யாழ்ப்பாணம், மார்ச் 13**

**மாதகல் கடற்பகுதியில் தற்போது முரல்மீன் திருவிழா களைகட்டியுள்ளது. தினமும் இரவுவேளைகளில் பலநூறு மக்கள் மாதகல் கடற்கரைக்குச் சென்று முரல் மீன் கொள்வனவில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.**

மாதகல் முரல் மீனுக்கு முன்னைய காலம்தொட்டு தற்போது வரையில் பெரும் கிராக்கி உள்ளது. பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் இந்த முரல் மீன் அதிகளவு பிடிபடும். வலைகளில் தேவை இல்லாமல் படகுகளில் மீன்களை விரட்டிச் சென்று அத்தாங்கு எனப்படும் கருவியால் மீன்களைப் பிடிப்பார்கள்.

இந்த மீன்பிடியில் மீனவர்கள் காட்டும் ஈடுபாட்டாலும் அதைக் காண வரும் அதிகரித்த மக்கள் கூட்டத்தாலும் 'முரல் மீன் திருவிழா' என்று இந்தக் காலப்பகுதி மாதகலில் அடையாளப்படுத்தப்படுகின்றது.

தற்போது இந்த முரல் மீன் பிடிபாடு மாதகலில் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

ஒரு முரல் மீன் 70 ரூபா முதல் 100 ரூபா வரையில் விற்கப்படுகின்றது.

தினமும் மாலை 6 மணி தொடக்கம் இரவு 10 மணி வரையில் முரல் மீன் பிடிப்பதில் மீனவர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். (ம-14,125)

## எல்லைதாண்டிய மீன்பிடியால் 16 தமிழக மீனவர்கள் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்ப்பாணம் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டமைக்காக 16 தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் நேற்றுக் காலை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இரு இந்திய விசைப்படகுகளில் பயணித்த தமிழகம் புதுக்கோட்டை மற்றும் நாகபட்டினத்தைச் சேர்ந்த மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 16 பேரும் மயிலிட்டித்துறை முகத்துக்குக் கொண்டுவரப்பட்டனர்.

இதில் 12 மீனவர்களைப் பருத்தித்துறை நீதிமன்றிலும் 4 மீனவர்களை ஊர்காவற்றுறை நீதிமன்றிலும் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-14,213)

## மருதங்கேணியில் கண்புரை சிகிச்சை

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்.மாவட்டத்திலுள்ள பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளிகளுக்கான கண் பரிசோதனை முகாம் மருதங்கேணி பிரதேச மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரனின் கண்காணிப்பில் இந்த பரிசோதனை முகாம் நடைபெற்றது. யாழ்.போதனா மருத்துவமனையில் நன்கொடையாளர்களின் உதவியுடன் இலவச கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## பலாலியில் காணி சுவீகரிப்பு இழப்பீடு வழங்குவதற்கு ஏப்ரலில் விசாரணைகள்!

யாழ்ப்பாணம், மார்ச் 13

பலாலி விமான நிலையத்தின் விஸ்தரிப்புகளுக்காக சுவீகரிக்கப்படவுள்ள காணிகளுக்கான இழப்பீடு வழங்குவது தொடர்பான விசாரணைகள் மற்றும் பரிசீலனைகள் ஏப்ரல் மாதம் ஆரம்பப் பகுதியில் முன்னெடுக்கப்படவுள்ளன.

வலிகாமம் வடக்கு தெல்லிப்பழைப் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட மயிலிட்டி வடக்கு (ஜே/246), மயிலிட்டி தெற்கு (ஜே/240), குரும்பசிட்டி (ஜே/242), பலாலி தெற்கு (ஜே/252), பலாலி மேற்கு (ஜே/256) ஆகிய கிராம அலுவலர் பிரிவுக்குள் உள்ள காணிகள் பலாலி சர்வதேச விமான நிலைய விஸ்தரிப்புக்காக சுவீகரிக்கப்படவுள்ளது. இதற்காக சில தனியாரின் காணிகள் பெறப்படவுள்ளன.

இவ்வாறாகச் சுவீகரிக்கப்படும் காணிகள் தொடர்பான காணி ஆவணங்கள் பரிசீலனை செய்யப்படவுள்ளன.

ஆவணப் பரிசீலனையும், இழப்பீட்டுக் கோரிக்கை தொடர்பான விசாரணையும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4ஆம், 5ஆம், 6ஆம் திகதிகளில் காலை 9 மணிமுதல் மாலை 4 மணி வரை தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

எனவே குறித்த தினங்களில் காணி உரிமையாளர்கள் தங்களது ஆவணங்கள் மற்றும் கோரிக்கைகளை முன்வைக்கமுடியும் என்று வலி.வடக்கு பிரதேசசெயலர் தெரிவித்துள்ளார். (ம-14)

# பாரம்பரியத்தை வெளிக்கொணர்வதனால் சுற்றுலாத்துறையை மேம்படுத்த முடியும்

### வடமாகாண சுற்றுலாப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 13

எமது பாரம்பரிய வழக்காறுகளை வெளிக்கொணர்வதனூடாக வடமாகாண சுற்றுலாத்துறையை வளர்த்தெடுக்க முடியும் என்று வடமாகாண சுற்றுலாப் பணியக பணிப்பாளர் ச.கிஷோகுமார் தெரிவித்தார்.


மாதகல் பகுதியில் முரல் மீன்பிடி தற்போது தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதை மையப்படுத்தி சுற்றுலாசார் விருத்தி நடவடிக்கைகளுக்காக அங்கு சென்று கள நிலைவரங்களை ஆராய்ந்த பின்னர் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாணத்தில் எமது வழக்காறுகளை வெளிகொண்டுவருவதன் ஊடாக வடமாகாண சுற்றுலாவை விருத்திசெய்ய முடியும். பாரம்பரியங்கள் மற்றும் பண்பாடுகள், உணவுமுறைகள் என்பவை பெருகிக் கிடக்கும் வடக்குப் பகுதியில் சுற்றுலாவுக்கு இவை பெரும் வாய்ப்பாகக் காணப்படுகின்றன. அந்தவகையில் இந்தக் காலம் மாதகல் வாழ் மக்களுக்கு மிக முக்கியமான ஜீவனோபாயம் மிகுந்த காலமாகக் காணப்படும்.

மாதகல் முரல் என்பது யாழில் பிரபலமான ஒன்றாகும். அத்தோடு அங்கு முரல் பிடித்தல் என்பது தொட்டுணரமுடியாத மரபாகவும் உள்ளது. இதனை நாம் சுற்றுலாவுக்குச் சாதகமாக்கவேண்டும்- என்றார். (ம-14,125)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ஈரான் – சவூதி அரேபியா 7 ஆண்டுகால பகையை சமாதானம் செய்த சீனா

## அமெரிக்காவுக்கு ஆபத்தா?

பீஜிங், மார்ச் 13

**சீனாவில் நடந்த சமாதான பேச்சை அடுத்து மீண்டும் தூதரக உறவை தொடங்க ஈரான் - சவூதி அரேபியா ஆகிய இரு நாடுகளும் ஒப்புக்கொண்டன.**

மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்றான சவூதி அரேபியாவில் கடந்த 2016 ஆம் ஆண்டு ஷியா பிரிவு மதகுரு ஒருவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இதற்கு, ஷியா பிரிவினர் அதிகம் வாழும் ஈரான் கடும் கண்டனம் தெரிவித்தது.

மேலும் இதற்கு பழிவாங்கும் விதமாக ஈரானில் உள்ள சவூதி அரேபியா தூதரகங்கள் மீது அடுத்தடுத்து தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இது இருநாடுகள் இடையிலான உறவில் விரிசலை ஏற்படுத்தியது. இதையடுத்து ஈரானுடனான தூதரக உறவை முறித்துக் கொள்வதாக சவூதி அரேபியா அறிவித்தது. இந்த நிலையில் இருநாடுகளுக்கும் இடையிலான தூதரக உறவை மீண்டும் புதுப்பிப்பது தொடர்பாக கடந்த சில ஆண்டுகளாகவே இருதரப்பும் பல்வேறு கட்டங்களாக பேச்சுகளில் ஈடுபட்டு வந்தன. எனினும் அதில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. இந்தநிலையில் இந்த இரு நாடுகளுக்கு இடையில் சமரசம் செய்ய சீனா முன்வந்தது.

அந்த வகையில் சீனாவின் தலைநகர் பீஜிங்கில் ஈரான் மற்றும் சவூதி அரேபியாவின் வெளியுறவு அமைச்சர்கள் மட்டத்தில் கடந்த 4 நாள்களாக முத்தரப்பு பேச்சு நடந்தது.

பேச்சின் இறுதியில் மீண்டும் தூதரக உறவை தொடங்க ஈரானும் சவூதி அரேபியாவும் ஒப்புக்கொண்டன.

இதேவேளை- அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் பதவியேற்றது முதலே அமெரிக்கா - சவூதி அரேபியா உறவு பலவீனமாகி வருவது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** வரவும் செலவும் அடுத்தடுத்து வந்தாலும் சமாளித்துவிடுவீர்கள். தந்தையின் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். முக்கியமான முடிவு எடுப்பீர்கள்.

**இடபம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் குல தெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கிடைப்பதால், செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள்.

**கடகம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளிக்கத் தேவையான பணம் கிடைத்துவிடும். நண்பர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். உற்சாகத்துக்குக் குறைவிருக்காது.

**சிம்மம்:** காரியங்கள் அனுகூலமாகும். செலவுகள் ஏற்பட்டாலும், அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். உறவினர்களால் வீட்டில் பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமையைக்கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**துலாம்:** தாய்வழி உறவுகளால் நன்மை ஏற்படும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டு. குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு மிகுந்த முக்கியத்துவம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமை அவசியம். எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படக்கூடும்.

**தனுசு:** உற்சாகமான நாள். மனஉறுதியுடன் செயற்படுவீர்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். சிலருக்கு எதிர்பாராத பண வரவுக்கு வாய்ப்பு உண்டு.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். அவசியத் தேவைகளுக்காக செலவு செய்யவேண்டி வரும். சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**கும்பம்:** வீட்டில் உற்சாகமும் கலகலப்புமான சூழ்நிலை காணப்படும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். உடல்ஆரோக்கியத்தில்கவனம்தேவை. வீண்அலைச்சலை தவிர்க்கவும்.

**மீனம்:** எதிலும் நிதானமாகச் செயற்படவும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக்கூடும்.

# 67 மில்லியன் பழைமையான டைனோசர் எலும்புக்கூடு ஏலம்

சூரிச், மார்ச் 13

67 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த டைனோசரின் எலும்புக்கூடு சுவிற்ஸர்லாந்தில் அடுத்தமாதம் ஏலத்துக்கு விடப்படவுள்ளது.

'டிரினிட்டி' என்றழைக்கப்படும் இந்த டைனோசர் எலும்புக்கூடு அடுத்த மாதம் சுவிற்ஸர்லாந்தின் சூரிச் நகரில் ஏலம் விடப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. ஐரோப்பாவில் டைனோசர் எலும்புக்கூடு ஏலம் விடுவது இதுவே முதல்முறை என்றும், சுவிஸ் நாட்டுப் பெறுமதியில் 60 முதல் 80 இலட்சம் பிராங்குகள் வரை ஏலம் போக வாய்ப்புள்ளது எனவும் கூறப்படுகிறது. (ச-இ)

# கனடாவில் நேர சேமிப்பு

றொறண்டோ, மார்ச் 13

கனடாவின் ஒன்றாரியோவில் நேரமாற்றம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது என அந்த நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2 மணிக்கு இந்த நேர மாற்றம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய இன்று முதல் கடிகாரங்களில் ஒரு மணித்தியாலம் கூடுதலாக வைக்கப்பட வேண்டும்.

பகல் வெளிச்சத்தை சேமிக்கும் நோக்கில் இவ்வாறு ஆண்டு தோறும் நேரமாற்றம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நேர சேமிப்பானது நேற்று ஞாயிறு தொடங்கி நவம்பர் மாத முதலாம் ஞாயிறுடன் பூர்த்தியாகின்றது எனக் கூறப்படுகிறது. (ச-இ).

# சீனாவின் புதிய பிரதமராக லீ கியாங்

பிஜிங், மார்ச் 13



சீனாவின் புதிய பிரதமராக லீ கியாங் தெரிவாகியுள்ளார். இதனை சீனா நாடாளுமன்றம் நேற்று உறுதிப்படுத்தியுள்ளது. முன்னைய பிரதமர் லீ கெகியாங்கின் பதவிக்காலம் நிறைவடைந்ததையடுத்து புதிய பிரதமராக அவர் அறிவிக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பதவி சீனாவின் 2ஆவது அதிகாரமிக்க பதவியாகும். இவர் சீனாவில் 3ஆவது முறையாக ஜனாதிபதியாகப் பதவி ஏற்றுள்ள ஜின்பிங்குக்கு மிகவும் நெருக்கமானவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. லீ கியாங், ஜியாங் மாகாணத்தின் தலைமை ஊழியர்கள் அதிகாரியாக இருந்தவர்.

இவரது காலத்தில் ஜியாங் மாகாணம் மிகப்பெரிய வளர்ச்சியைப் பெற்று செல்வச் செழிப்பான மாகாணமாக மாறியதுடன் கொரோனாக் காலகட்டத்தில் அதனைக் கட்டுப்படுத்த இவர் மிகச்சிறப்பாகச் செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# ஹரி - மேகன் தம்பதியின் குழந்தைகளுக்கு அரச பட்டம்

## பக்கிங்ஹாம் அரண்மனை அறிவிப்பு



லண்டன், மார்ச் 13

பிரித்தானியாவில் அரச குடும்பத்தில் இருந்து வெளியேறிய ஹரி - மேகன் தம்பதியின் குழந்தைகளுக்கு அரச பட்டம் உண்டு என பக்கிங்ஹாம் அரண்மனை அறிவித்துள்ளது. பிரித்தானிய மன்னர் சாள்ஸின் 2ஆவது மகன் இளவரசர் ஹரி தொலைக்காட்சி நடிகை மேகன் மார்கெலை காதலித்து, அரச குடும்பத்தின் ஒப்புதலோடு கடந்த 2018 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டனர். அதன்பின்னர் அரச குடும்பத்திலிருந்து வெளியேறிய அவர்கள் அமெரிக்காவுக்கு குடிபெயர்ந்தனர். ஹரி - மேகன் தம்பதிக்கு ஆர்ச்சி என்ற 3 வயது மகனும், லிலிபெட் என்ற ஒரு வயது மகளும் உள்ளனர். இந்த நிலையில் ஹரி - மேகன் தம்பதியின் குழந்தைகள் இருவரும் அரச குடும்பத்தின் அரச பட்டங்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இனி அவர்கள் முறையாக இளவரசர் ஆர்ச்சி இளவரசி லிலிபெட் என அழைக்கப்படுவார்கள் என்றும் பக்கிங்ஹாம் அரண்மனை அறிவித்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



நாளொரு நல்வார்த்தை

மனிதனை மனிதனாக்குபவை உதவிகளும் வசதிகளுமல்ல, இடையூறுகளும் துன்பங்களுமே. -மத்யூஸ்.


## ஆறுதலுக்குள் ஒளிந்திருக்கும் ஆபத்து

கடந்த சில நாள்களாக அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் மதிப்பு உயர்வடைவதாகச் செய்திகள் வருகின்றன. அந்த உயர்வின் காரணமாக அத்தியாவசியப் பொருள்கள், எரிபொருள், மின்சாரம் உள்ளிட்ட சேவைகளுக்கான கட்டணங்கள் என்பன குறையப்போவதாகவும் சொல்லப்படுகின்றது. ஏற்கனவே கோதுமை மாவினதும், பாணினதும் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. இருப்பினும் ஏனைய வெதுப்பக உற்பத்திகளின் விலை குறையவில்லை. ஒருகட்டத்தில் ஒரு அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி 400ஐ தாண்டிவிடும் அபாயம் இருந்தநிலையில், இப்போது அது சடுதியாக 310 ரூபாவுக்கும் 330 ரூபாவுக்கும் இடைப்பட்டதாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டமை ஆறுதலான விடயமே. ஆனால், அந்த ஆறுதலுக்குள் ஒருபெரும் ஆபத்து ஒளிந்திருப்பதை இந்த அரசாங்கம் இலாவகமாக மறைத்தே வைத்திருக்கிறது.

இலங்கை எல்லா வளங்களும் கொட்டிக்கிடக்கும் ஒரு நாடாக இருந்தபோதும், அந்த வளங்களைச் சரிவரப் பயன்படுத்தி தன்னை பொருளாதார ரீதியாக உயர்த்திக் கொள்ள முடியாத - முனையாத நிலையே இன்றுவரை தொடர்கின்றது. பொருளாதார நெருக்கடி வந்த பின்னர், இலங்கையின் பிரதான ஏற்றுமதித் துறைகளான தைத்த ஆடைகள், தேயிலை, தெங்குப் பொருள்கள் என்பவற்றின் உற்பத்தியிலும் பெருவீழ்ச்சி ஏற்பட்டது. அத்தோடு குறித்த பொருள்களின் உற்பத்திச் செலவினமும் அதிகரித்தது. இந்த விலை அதிகரிப்பு சர்வதேசச் சந்தையில், இலங்கை ஏனைய நாடுகளுடன் போட்டிபோட முடியாத நிலையையும் உருவாக்கியிருந்தது. போதாக்குறைக்கு ஜி.எஸ்.பி. வரிச் சலுகையையும் இலங்கையின் ஜனநாயக விரோதப் போக்கினால் இழக்கும் அபாயமும் நெருங்கிக்கொண்டிருக்கிறது. இப்படி எல்லாப்பக்கமும் இலங்கையின் பொருளாதாரம் அடிவாங்கிக் கொண்டிருக்கையில், ரூபாவின் பெறுமதி மட்டும் எப்படி திடீரென டொலரோடு மல்லுக்கட்டி, பலமடைய முடியும்? அங்கேதான் இருக்கிறது இலங்கை அரசாங்கத்தினதும், மத்திய வங்கியினதும் கைங்கரியம்.

டொலரின் பெறுமதியை மிதக்கவிடாமல் அதன் இயல்பான பெறுமதிக்குச் செல்லவிடாமல் மத்திய வங்கி கட்டுப்படுத்தத் தொடங்கியிருக்கிறது. இப்போது மத்திய வங்கி தீர்மானிப்பதே இலங்கையில் டொலரின் பெறுமதி. அதனாலேயே டொலர் சரிவடைய, ரூபா நிமிர்வதான தோற்றப்பாடு உருவாக்கப்பட்டுள்ளது. அத்தோடு இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் கடன் கிடைக்கப் போவது உறுதி செய்யப்பட்டமையும், ரூபாவின் பெறுமதியை உண்மையாகவே சிறிதளவேனும் அதிகரிக்கச் செய்துள்ளது. இருப்பினும் அடுத்தவர்களிடம் கடன் வாங்கியும், பலவந்தமாக டொலரின் பெறுமதியைக் கட்டுப்படுத்தியும் ரூபாவின் பெறுமதியை 'செயற்கையாக' அதிகரிக்கச்செய்வதால் அதன் பின்விளைவுகள் மிகமோசமானதாகவே அமையும்.

கோத்தாபயவின் ஆட்சிக்காலத்திலும் இவ்வாறு டொலரைக் கட்டுப்படுத்தி வைத்திருந்தார்கள். ஆனால், ஒரு கட்டத்தில், அப்படிக் கட்டுப்பாட்டுக்குள் டொலரின் பெறுமதியைப் பேணமுடியாத நிலை தோன்றியபோதே அதனை மிதக்கவிட்டார்கள். காற்று நிரப்பப்பட்ட பலூனில் திடீரென ஒரு ஓட்டை விழுந்தால் என்னவாகுமோ, அதேபோல இலங்கையின் ரூபா மதிப்பிழந்து சுருங்கி விழுந்தது, பொருளாதாரம் மீளவே முடியாத சகதிக்குள் சிக்கியது. இப்போதும் அதேபாணியில் டொலரைக் கட்டுப்படுத்தி, ரூபாவினதும், தனதும் மதிப்பைக் கட்டியெழுப்பி, மக்கள் மனங்களை வென்று, ஜனாதிபதித் தேர்தலை நடத்தி, இன்னும் 5 வருடங்களுக்கு தன் ஆட்சியை உறுதிப்படுத்த ரணில் நினைக்கிறார். சர்வதேச நாணய நிதியத்தின் கடன் கிடைப்பதால் இப்போதைக்கு டொலரின் பெறுமதி கைமீறிப் போய்விடாது என்பது ரணில்தரப்பின் நம்பிக்கை. ஆனால், உள்நாட்டில் ஆரோக்கியமான, நம்பிக்கை தரக்கூடிய பொருளாதார சமிக்ஞைகள் எதுவும் இல்லாத சூழலில், பிறத்தியாரிடம் கடன் வாங்கி பிள்ளைக்கு கல்யாணம் செய்து வைப்பது போன்ற தேவையற்ற விஷப்பரீட்சையில் ரணில் அரசாங்கம் இறங்கியிருக்கிறது. ஆனால், இதன் பாதக விளைவுகளை அனுபவிக்கப்போவதென்னவோ, ரணிலோ அவரோடு கூட இருக்கும் அமைச்சர்களோ அல்லர் மாறாக இந்த நாட்டு மக்களே!




# இலங்கைக்கு உதவுவதை தவறவிட்ட ஜி-20 நாடுகள்!

## சர்வதேச மன்னிப்புச்சபை சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 13

அண்மையில் நடைபெற்ற ஜி-20 நாடுகளின் நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்களின் கூட்டத்தில், கடன்நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் இலங்கைக்கு உதவுவதற்கான வாய்ப்பு இருந்ததாகவும் அது தவறவிடப்பட்டிருப்பதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

சர்வதேச மன்னிப்புச்சபையின் ஆய்வாளர் சன்ஹிதா அம்பாஸ்ற் இது தொடர்பில் தெரிவித்ததாவது:-

இலங்கையை கடன் நெருக்கடியில் இருந்து விடுவிப்பதும், இலங்கையர்களின் உரிமைகள் பேணப்படுவதை உறுதிப்படுத்துவதும் மிகமிக அவசியமானதாகும்.

உலகளாவிய பொருளாதாரம் முகங்கொடுத்திருக்கும் சவால்கள் தொடர்பில் கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்ற ஜி-20 நாடுகளின் நிதியமைச்சர்கள் கூட்டத்தில் ஆராயப்பட்டது. இருப்பினும் கடன்நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள நாடொன்றுக்கு உதவுவதற்கான வாய்ப்பு தவறவிடப்பட்டுள்ளது. குறிப்பாக அக்கூட்டத்தின் இறுதி அறிக்கையில் இலங்கை, மக்கள் முகங்கொடுத்திருக்கும் சவால்களுக்குத் தீர்வுகாண்பது குறித்து வெறுமனே மேம்போக்காக மாத்திரமே அவதானம் செலுத்தப்பட்டுள்ளமை மிகுந்த அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

அந்த அறிக்கையானது உலகளாவிய ரீதியில் நாடுகள் முகங்கொடுத்திருக்கும் கடன்நெருக்கடிக்குத் தீர்வுகாண்பதுடன், இலங்கையின் கடன் நிலைவரம் தொடர்பில் உடனடித் தீர்வொன்றைக் கண்டறிவதற்கான அவசியத்தை ஏற்றுக்கொண்டிருப்பினும், அதனை முன்னிறுத்தி செயற்றிறன்மிக்க திட்டங்களோ அல்லது நடவடிக்கைகளோ முன்னெடுக்கப்படவில்லை.

ஜி-20 அமைப்பானது சீனா, இந்தியா, ஜப்பான் மற்றும் தென்கொரியா உள்ளிட்ட இலங்கையின் முக்கியமான இருதரப்புக் கடன்வழங்குநர்களையும், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட பலதரப்புக் கடன்வழங்கல் கட்டமைப்புக்களில் அங்கம்வகிக்கும் ஆதிக்கம் மிகுந்த நாடுகளையும் உள்ளடக்கியுள்ளது.

எனவே இவ்வமைப்பானது செயற்றிறன் மிக்கவகையில் ஒருங்கிணையுமேயானால், அதனூடாக இலங்கைக்கு அவசியமான கடன் சலுகையை வழங்கவும், நெருக்கடிக்கு மத்தியில் மக்களின் பொருளாதார மற்றும் சமூக உரிமைகளைப் பாதுகாத்து வலுப்படுத்தவும் முடியும். ஏனெனில் இலங்கையின் பொருளாதார நெருக்கடியானது நாட்டுமக்கள்மீது இன்னமும் மிகமோசமான தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது. உயர்வான பணவீக்கம், மட்டுப்படுத்தப்பட்டளவிலான சமூகப்பாதுகாப்பு, உணவு மற்றும் சுகாதாரம் போன்ற அத்தியாவசியப் பொருள்கள், சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் காணப்படும் சிக்கல்கள் என்பன மக்களின் வாழ்க்கைத்தரத்திலும், அவர்களின் உரிமைகளிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாக இலங்கையின் கடன்நெருக்கடியானது மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் இயலுமையைப் பாதித்துள்ளது. எனவே 22 மில்லியன் மக்களின் உரிமைகளில் ஏற்படும் தாக்கத்தை முடிவுக்குக்கொண்டுவருவதற்கு இலங்கையை இந்தக் கடன்நெருக்கடியிலிருந்து விடுவிப்பது இன்றியமையாததாகும் - என்றுள்ளது. (ம)

நாளை 14.03.2023 செவ்வாய்க்கிழமை மாசி 30
சுபநேரம் : 10.51 - 12.21
ராகுகாலம் : 03.21 - 04.51

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.முற்றவெளிப் பகுதியில் மீளவும் கலாசாரச் சீரழிவுகள்

## கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்.முற்றவெளிப் பகுதியில் போதைப்பொருள் பாவனை மற்றும் கலாசாரச் சீரழிவுகள் மீளவும் தலைதூக்கியுள்ளன என அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வீரசிங்கம் மண்டபம் முன்பாகவுள்ள பகுதிகள் மற்றும் முனீஸ்வரர் கோயில் போன்ற இடங்களில் இரவு வேளைகளில் இளைஞர்கள் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகிறது.

இளைஞர்கள் சிலர் இந்தப் பகுதிகளில் நின்று போதைப் பொருள் பாவனை மற்றும் விற்பனையில் ஈடுபடுகின்றனர் எனவும் தெரியவருகிறது.

இந்தப் பகுதிகளில் பொலிஸாரின் கண்காணிப்பு ரோந்து நடவடிக்கைகள் இரவுவேளைகளில் இடம்பெறாமையால் இந்த சட்டவிரோதசெயல்கள் தலைதூக்குகின்றன.

எனவே இந்தப் பகுதிகளில் மீளத் தலைதூக்குகின்ற போதைப்பாவனை மற்றும் கலாசாரச் சீரழிவுகளை கட்டுப்படுத்த பொலிஸார் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என அந்தப் பகுதி மக்கள் மேலும் தெரிவித்தனர். (ச-17)

# கற்கைநெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியில் 2023ஆம் ஆண்டுக்கான என்.வி.கியூ. சான்றிதழ் மற்றும் டிப்ளோமா தரம் என அனைத்து கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு, கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அனைத்து முழுநேர கற்கைநெறிகளும் முற்றிலும் இலவசமான கற்கைநெறிகளே. சில கற்கை நெறிகளுக்கு மேலதிகமாக மாணவர்களை அனுமதிக்கக்கூடியதாக உள்ளதால் பயில விரும்புவோர் தாமதமின்றி எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாக தொழில்நுட்பவியல் கல்லூரியின் தொழில் வழிகாட்டல் நிலையத்துடன் அல்லது 0212220028, 0212212403 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)




மன்னார் மாவட்டத்திலுள்ள இரண்டு மருத்துவமனைகளுக்கு மன்னார் றோட்டரிக் கழகத்தின் நிதிப் பங்களிப்பில் அண்மையில் பொருள்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

தலைமன்னார் மருத்துவமனைக்கு நோயாளர்களுக்கான கட்டில்கள் மற்றும் சக்கரநாற்காலி உள்ளிட்ட பொருள்களும் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு புற்கள் வெட்டும் இயந்திரமும் றோட்டரிக் கழகத்தால் வழங்கப்பட்டன. (ச-213)

# புலம்பெயர்ந்தோர் நிதியில் பஞ்சாபிகேசனுக்கு சிலை

சாவகச்சேரி, மார்ச் 13

சங்கத்தானை இசைமேதை, நாதஸ்வர வித்துவான் கலாநிதி மு.பஞ்சாபிகேசனுக்கு சிலை நிறுவப்படவுள்ளது.

சங்கத்தானைப் பகுதியில் ஏ-9 வீதியில் சிலை நிறுவுவதற்குப் பொருத்தமான இடத்தைத் தெரிவுசெய்ய அரச காணியை எதிர்பார்த்துள்ளனர்.

புலம்பெயர் நாடுகளில் உள்ள தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்தவர்களின் நிதிப்பங்களிப்பில் சிலை அமைக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள், ஏற்பாட்டாளர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ஒ-14-9)

# மோ. சைக்கிள் விபத்தில் இரு இளைஞர்கள் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 13

மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர்கள் இருவர் காயமடைந்துள்ளனர். இந்த விபத்து கொக்குவில் கிழக்கு ஆடியபாதம் வீதியிலுள்ள ஐயப்பன் ஆலயத்துக்கு அருகில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

விபத்தில் கொக்குவில் மற்றும் கைதடி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இரு இளைஞர்களே காயமடைந்துள்ளனர். காயமடைந்த இருவரும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். விபத்துத் தொடர்பான விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-14,66)



# விசேட வரிச்சலுகையுடன் மின்சார வாகன இறக்குமதி

கொழும்பு, மார்ச் 13

இலங்கைக்கு சட்டரீதியாக வெளிநாட்டுத் தொழிலாளர்கள் அனுப்பும் பணத்தின் அடிப்படையில் மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதுதொடர்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்ததாவது:

வெளிநாட்டு ஊழியர்களுக்கு வரிச்சலுகையுடன் கூடிய மின்சார வாகனங்களை இறக்குமதி செய்யும் வேலைத்திட்டம் கடந்த வியாழக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டுப் பணப்பரிவர்த்தனையை அதிகரிக்கும் முகமாக இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட வாகனங்களை விடுவிக்கும் பணியை சுங்கத்துறை ஏற்கனவே ஆரம்பித்துள்ளது.

மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு செலுத்த வேண்டிய வரியை வெளிநாட்டு நாணயத்தில் செலுத்த வேண்டும்.

இந்த வேலைத்திட்டத்துக்கு வெளிநாட்டு ஊழியர்களிடமிருந்து சாதகமான பதில்கள் கிடைத்துள்ளன - என்றார். (ச-இ)

# இளைஞர்களை நல்வழிப்படுத்தி ஆரோக்கிய சமூகம் பெறுவோம்

## வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 13

போதை மற்றும் மதுப்பாவனைகளுக்கு அடிமையாகி சமூக விரோதச் செயல்களில் ஈடுபடும்- பிழையான வழிகளில் பயணிக்கும் இளைஞர்களை அதிலிருந்து மீட்டெடுத்து நல்வழிப்படுத்த உரிய வேலைத் திட்டங்களை விரைந்து உருவாக்க வேண்டும் என்று வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ரவிச்சந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்றைய இளம் சமூகம் போதை, மதுவுக்கு அடிமையாகி சமூக விரோத செயல்களிலே ஈடுபட்டு தங்களது வாழ்க்கையை தொலைத்து வருகின்றது. இளைஞர்கள் ஒரு சமூகத்தின், நாட்டின் அச்சாணியைப் போன்றவர்கள். இவர்களால் தேசம் செழுமை பெறுகின்றது. இளைஞர்கள் பிழையான முறையற்ற பழக்கவழக்கங்களில் மாட்டிக்கொள்வதால் சமுதாயமே சிதைவடையும் நிலை தோன்றும்.



இதற்கு பிரதான காரணம் மாணவர்கள் கல்வியில் நாட்டத்தைச் செலுத்தாமை மற்றும் பாடசாலைக்கு ஒழுங்கின்மை ஆகியவையாகும். அனைத்து மாணவர்களும் கட்டாயக் கல்வியைப் பெறவேண்டும். மாணவர்களை நல்வழிப்படுத்துவதில் பெற்றோர், பாடசாலை நிர்வாகம் உட்பட சமூக அமைப்புக்கள் பொறுப்புடன் செயலாற்ற வேண்டும். போதையால் பாதை மாறும் இளையோரை நல்வழிப்படுத்தி நற்பிரஜைகளாக உருவாக்கி ஆரோக்கிய சமூகத்தை கட்டியெழுப்புவோம்- என்றார். (ச)

# செயற்பட்டு மகிழ்வோம்

சாவகச்சேரி, மார்ச் 13

மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயத்தின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு, பாடசாலை விளையாட்டு மைதானத்தில் எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் க.இளங்கோவன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் வ.நடராசா, சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய செயற்பட்டு மகிழ்வோம் இணைப்பாளர் இராசலட்சுமி மயில்வாகனசிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-14,159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்



ஆசிரியர் திருமதி

**சகுந்தலாதேவி சிவநேசன்**

(SLTS I, பயிற்றப்பட்ட உடற்கல்வி)

**சேவைக்காலம்**

- யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி - 01.09.1992 - 05.01.1997
- யா/ சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலை - 06.01.1997 - 31.01.2000
- யா/ அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் - 01.02.2000 - 02.01.2014
- யா/ நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை - 03.01.2014 - 13.03.2023

எமது பாடசாலையில் அளப்பெரும் சேவையாற்றி இன்று (13.03.2023) திங்கட்கிழமை ஓய்வுபெறும் திருமதி சகுந்தலாதேவி சிவநேசன் அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர் :

ஆசிரியர் கழகம்

யா/ நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை

(CS 23885) (2.6)


# கருங்கல் அகழ்வுக்கு அனுமதி ஓமந்தையில் மக்கள் எதிர்ப்பு

வவுனியா, மார்ச் 13

வவுனியா - ஓமந்தை கதிரவேலர் பூவரசங் குளம் பகுதியில் கருங்கல் அகழ்வதற்கு தனிநபர் ஒருவருக்கு வழங்கப்பட்ட அனுமதியை இடைநிறுத்துமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கை யில்,


குறித்த பகுதியிலுள்ள மலைக் குன்று ஒன்றில் கருங்கல் அகழ்வுகளுக்கு தனிநபர் ஒருவருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அந்த மலைக்குன்றில் நாம் நீண்டகாலமாக இறைவழிபாட்டில் ஈடுபட்டு வருகின்றோம். அங்குள்ள பிள்ளையார் சிலை, சூலம் என்பன நேற்றுமுன்தினம் சேதமாக்கப்பட்டுள்ளன. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இங்கு கருங்கல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டால் குளத்தின் நீர்மட்டம் குறைவடையும் அபாயமும் ஏற்படும்.

எனவே இந்த விடயங்களைக் கவனத்தில் கொண்டு வழங்கப்பட்ட அனுமதியை இடைநிறுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன், பிரதேசசபையின் தவிசாளர் த.யோகராஜா ஆகியோர் பொதுமக்களுடன் கலந்துரையாடிய பின்னர் தெரிவிக்கையில்,



குறித்த இடத்தில் ஆலயவழிபாடு இடம்பெறுவது தொடர்பில் தொல்பொருள் திணைக்களம் மற்றும் சுற்றுச்சூழல் அதிகார சபைக்கு தெரியப்படுத்தி தீர்வு பெற்றுத்தரப்படும்- என்றனர்.

(ச-110)


# முதலாம் ஆண்டு நினைவு தினம்



தோற்றம் 20.10.1937 மறைவு 22.02.2022

அமரர்

**தம்பிப்பிள்ளை உத்தமசீலன்**

(நாடகக் கலைஞர்)

திதி: மாசி அபரபக்க சஷ்டி

அன்பின் திருவுருவே
எங்கள் ஆருயிரே
பக்குவங்கள் பலகூறி
எம்மைப் பாசத்தோடு வழிநடத்திய
எம் உயிரினும் மேலான குடும்பத் தலைவரே!
கள்ளமில்லா உள்ளத்தோடு உற்றார்.
உறவினர்கள் நண்பர்களோடு உறவாடி
அவர்கள் மனதில் ஆழமாய் இடம்பிடித்தீர்கள்
நல்லதோர் நாடகக் கலைஞனாய்
இனிய குரல் வளமுடைய பாடகனாய்
கலையுணர்வும் கலைரசனையும்மிக்க
கலைஞனாய் இவ்வுலகில் வாழ்ந்தீர்கள்
நோயுற்றிருந்த வேளையிலும் அடிக்கடி எமை அழைத்து
ஆறுதல்கூறி உங்கள் அன்பினை வெளிப்படுத்தினீர்கள்
மாசி மாதம் மாலைப் பொழுதுதனில் உங்கள்
இதயத்துடிப்பு குறைந்து செல்லும் நேரத்தில்
உங்களால் எதுவுமே பேசமுடியாதபோதும்
எம்மை விட்டு பிரிந்து செல்லமுடியாமல் இரக்கத்தோடு
நீங்கள் எம்மைப் பார்த்த அந்தப் பார்வை எங்கள்
இதயத்தை உருக்குதையா
எங்கள் மீது நீங்கள் கொண்ட எல்லையற்ற
பாசத்தினை என்றென்றும் நாம் மறவோம்
எங்கள் அன்புத் தெய்வமே உங்கள் ஆத்மா
சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை
வேண்டி நிற்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(cs 23882) (2.6)


# மோ.சைக்கிளில் ஆவணங்கள் திருட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 13

புத்தூர் சாயிபாபா ஆலயத்துக்குச் சென்ற பக்தர் ஒருவரின் மோட்டார் சைக்கிளிலிருந்த அடையாள அட்டை உள்ளிட்ட பல ஆவணங்கள் கடந்த வியாழக்கிழமை திருடப்பட்டுள்ளன என்று அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

நீர்வேலி வடக்குப் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் ஆலயத்துக்குச் சென்று அங்கு மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டுச் சென்றுள்ளார். அப்போதே மோட்டார் சைக்கிளில் காணப்பட்ட இரண்டு அலைபேசிகள், ஏ.ரி.எம். அட்டை, அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் 2 ஆயிரம் ரூபா பணம் என்பன திருடப்பட்டன என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முறைப்பாட்டுக்கமைய விசாரணைகளை அச்சுவேலிப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

(ம-14,23)

# கள்ளநோட்டு அச்சிட்டவர் விளக்கமறியலில்

முல்லைத்தீவு, மார்ச் 13

கள்ளநோட்டு அச்சிட்ட குற்றச்சாட்டில் கைதான நபருக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள் ளது.

புதுக்குடியிருப்புப் பகுதியில் 35 இலட்சம் ரூபா கள்ளநோட்டு அச்சிட்ட குற்றச்சாட்டில், சந்தேகநபரொருவர் நோட்டை அச்சிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட இயந்திரத்துடன் சிறப்பு அதிரடிப்படையினரால் கடந்த வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபரை முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் முன்னிலையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முன்னிலைப்படுத்தியபோது, அவரை எதிர்வரும் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சந்தேகநபர் திருகோணமலை குச்சவெளிப் பகுதியில் கள்ளநோட்டுடன் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(ம-14,19)


# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 15.06.1939 மறைவு 23.02.2022

**அமரர் தருமலிங்கம் சண்முகராஜா**

(ஓய்வுபெற்ற பரந்தன் இரசாயன தொழிற்சாலை ஊழியர்)

ஆண்டொன்று சென்றதே ஆறவில்லை எங்கள் துயரம்
காலத்தால் எம்மை விட்டு கண் இமைக்கும் பொழுதில் பிரிந்தவரே
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து எங்களை
வானுயர விளங்க வைத்த எங்கள் அன்பு தெய்வமே அப்பா!
அன்பு ஒன்றை கொடுத்து எம் நெஞ்சில் அன்புடன் வாழ்கிறீர்கள்.
என்றும் தூண்டிலில் பட்ட மீனாய் துடிக்கிறோம் அப்பா!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் அத்தனை நினைவுகளும்
எம்மை விட்டு என்றுமே பிரியாது அப்பா ....!

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(CS 23887) 1-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடையை மீறி பத்மநாபாவுக்கு சிலை: பொதுமக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு


**தொடர்புகொள்ளவும்**

பல்வேறு தலைப்புக்களில் தெருவெளி ஆற்றுகைகள் நிகழ்த்துவதற்கு நடிகர்கள், நடிகைகள் உடன் தேவை. சமூக விழிப் பூட்டும் எண்ணம் கொண்ட ஆற்றுகை கலைஞர்கள் தொடர்புகொள்ளவும்.
விழிப்புணர்வு நாடகங்கள் மங்களகர மான விழாக்களுக்கான இசை நிகழ்வு களுக்கும் எம்மை அழைத்து மகிழலாம்.

**076 296 3944**


வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தடையை மீறி வவுனியா மணிக்கூட்டுகோபுர சந்திக்கு அருகாமையில் பத்மநாபாவுக்கு சிலை அமைக்கும் பணிகள் தொடர்பில் பொதுமக்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

வவுனியா மணிக்கூட்டு கோபுரசந்திக்கு அருகாமையில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான இடத்தில் தந்தை செல்வாவின் சிலைக்கு அருகாமையில் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் முன்னாள் தலைவர் பத்மநாபாவுக்கு சிலை அமைக்கும் பணிகள் நகரசபையின் அனுமதியுடன் முன்னெடுக்கப்படு கின்றன.

இந்தநிலையில் தமது திணைக்களத்துக்குச் சொந்தமான இடத்தில் உரிய அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளாமல் சிலை அமைக்கப்பட்டு வருவதால் அதனை உடனடியாக இடைநிறுத்தி உரிய நடைமுறைகளைப் பின்பற்றுமாறு வவுனியா மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிறைவேற்று பொறியியலாளரால் வவுனியா நகரசபைக்குக் கடிதம் மூலம் தெரியப்படுத்தப்பட்டது.

கடிதத்தின் பிரதிகள் வவுனியா பிரதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மற்றும் வவுனியா பொலிஸ் நிலையம் உட்பட சில திணைக் களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

அதனையடுத்து சில நாள்களாக சிலை அமைக்கும் பணிகள் இடைநிறுத்தப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மீண்டும் துரிதகதியில் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கு பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றனர்.

இலங்கை, இந்திய படையினருடன் இணைந்து தமிழ்மக்கள் மீதான படுகொலைகள் பலவற்றுக்கு கார ணமானவர் என பத்மநாபா மீது குற்றச்சாட்டுக்கள் உள்ளமையும் அதனால் அவர் சுட்டுக் கொல்லப் பட்டமையும் குறிப்பிடத்தக்கது.


(ம-14,110)

## மரண அறிவித்தல்

### சந்திரசேகரம்பிள்ளை புஸ்பநாதன்

(ஓய்வுபெற்ற பொறியியலாளர்)

தோற்றம் 27.10.1940 | மறைவு 10.03.2023



கோண்டாவில் கிழக்கு, பொற்பதி வீதி, பழைய காளிகோவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரசேகரம்பிள்ளை புஸ்பநாதன் அவர்கள் கடந்த (10.03.2023) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம்பிள்ளை - நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், இருபாலை V.H. லேனை சேர்ந்த காலஞ்சென்றவர்களான காசிலிங்கம் - அன்னம்மா தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற சந்திராதேவியின் அன்புக் கணவரும், சத்தியநாதன், குபேந்திரநாதன், கமலநாயகி (இந்தியா), கெங்கேஸ்வரி (UK) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற வைத்தியர் குருநாதன் மற்றும் பூமகள், திருச்செல்வம் ஆகியோரின் மைத்துனரும், நிரஞ்சனா, ஹேமமாலினி, பிறேமலதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுமுகன், பாலகுமார், குகதாசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சாகித்தியன், பிரணித்தா, சந்தியா, மிஷான்யா, சாகிதன், நிரஜா, நிதர்சனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பொற்பதி வீதி,**
**கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.**

(CS 23868) (3/6)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

### செல்வராசா பரிமளம் (தேவி, திருமங்கலம்)



யாழ். உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் யாழ். வயாவிளான் மற்றும் ஜேர்மனி பேர்லினை வதிவிடமாகக் கொண்டவருமான திருமதி செல்வராசா பரிமளம் கடந்த (02.03.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த அமரர் சுப்பிரமணியம் அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், அமரர் சின்னையா சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்வராசாவின் அன்பு மனைவியும், வாசுகி, தேவகி, குமணன், மைதிலி, குந்தவி ஆகியோரின் அன்புத் தாயாரும், உதயசூரியன், இராசேந்திரம், கௌசலாதேவி, ஜெயாதரன், ஜெயபாலச்சந்திரன் ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற பரமேஸ்வரி காந்திமதி, பராசக்தி, வேலாயுதப்பிள்ளை, வெற்றிவேலாயுதப்பிள்ளை, வசந்தராணி ஆகி யோரின் சகோதரியும், சுப்பிரமணியம், சிவஞானசுந்தரம், தர்மலிங்கம், பூமாதேவி, ஞானதேவி, திருஞானசம்பந்தர் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் வதிவிடமான ஜேர்மனியில் இன்று (13.03.2023) திங்கட்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சிவகுல வீதி,**
**உரும்பிராய் மேற்கு.**

**தகவல்:**
**வெற்றிவேலாயுதப்பிள்ளை**
**(காந்தி சகோதரர்)**
**077 208 9903**

(CR 39435) 1-6

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## 45ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 18 . 08 . 1985

மறைவு 29 . 01 . 2023



கடந்த (29.01.2023) ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் பாசமிகு இளைய புதல்வன்

### அமரர் சண்முகலிங்கம் பிரதாப்

**(உரிமையாளர் - வதனி ஜுவல்லறி, கொடிகாமம்)**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (14.03.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெறும். அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.)**

**பொற்கொல்லர் வீதி,**
**சங்கத்தானை, சாவகச்சேரி.**

**குடும்பத்தினர்.**
**077 800 2784**
**076 199 1915**

(CR 39436) 1-6

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 01 . 1951

மறைவு 12 . 03 . 2023



### திரு. செல்லத்துரை ஸ்ரீகந்தவேல்

**(இளைப்பாறிய இறைவரித் திணைக்கள முகாமைத்துவ உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம்)**

கணேஸ்வரம், அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், மாவத்தை, அளவெட்டி மத்தியை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை ஸ்ரீகந்தவேல் நேற்று (12.03.2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், தில்லை நடராசா இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திரவதனா (ஓய்வுபெற்ற நிதி உதவியாளர், வலிகாமம் கல்வி வலயம்) அவர்களின் அன்புக் கணவரும், காயத்ரீ (விரிவுரையாளர் - மொழியெயர்ப்புக் கற்கைநெறி யாழ். பல்கலைக்கழகம்), அவர்களின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2023) திங்கட்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் மாவத்தை, அளவெட்டி மத்தியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மாவத்தை,**
**அளவெட்டி மத்தி.**

**021 221 5510**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு விழா!

முல்லைத்தீவு, மார்ச் 13

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்ட வற்றாப்பளை மங்களேஸ்வரா விளையாட்டுக்கழகம் ஆண்டுதோறும் நடத்தும் மாபெரும் சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு விழா இம் முறையும் சிறப்பாக நடைபெறவுள்ளது. சித்திரைப் புத்தாண்டின் விளையாட்டு நிகழ்வுகளாக காலை 6 மணிக்கு மரதன் ஓட்டப்போட்டி இடம்பெறவுள்ளது. தொடர்ந்து காலை 8 மணிக்கு வடமாகாணம் தழுவிய ஆண்களுக்கான சைக்கிளோட்டப் போட்டியும் நண்பகல் 12.30 மணியளவில் வடக்கு மாகாணம் தழுவிய மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியும் 4 பிரிவுகளாக நடத்தப்படவுள்ளன என ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ச-19)

# மகளிர் தினமும் விருது வழங்கலும்

மன்னார், மார்ச் 13

மன்னார் மாவட்டச் செயலகத்தால் மாவட்ட ரீதியில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள மகளிர்தின விழாவும் சாதனைப் பெண்களுக்கான விருது வழங்கலும் மன்னார் நகரசபை கலாசார மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பால்நிலை ஒப்புரவு மற்றும் சமத்துவத்துக்கான நிலையமும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், இலங்கை ஏதிலியர் மறுவாழ்வு கழகம் என்பன இணைந்து மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஒழுங்கமைப்பில் இந்த விழா நடத்தப்படுகிறது.

மன்னார் மாவட்டச் செயலர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நடைபெறவுள்ள விழாவில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா கலந்துகொள்ளவுள்ளார். (ம-14-213)

# சமஸ்கிருதம், புராணபடனம் இலவச வகுப்புகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 13

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், இலவச சமஸ்கிருதம் மற்றும் புராண படன வகுப்புகள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெறவுள்ளன.

காலை 9 மணி முதல் ந.ப. 12 மணிவரை சமஸ்கிருத வகுப்பும் பி.ப. ஒரு மணி முதல் பி.ப. 3 மணிவரை புராணபடன தலைமைத்துவ, இதிகாசங்களினூடே அறக்கருத்து வகுப்புகளும் நடைபெறவுள்ளன.

சமஸ்கிருத வகுப்புக்கு அந்தண மாணவர்களும், பல்கலைக்கழக மாணவர்களும் கலந்துகொள்ள முடியும். புராணபடன, தலைமைத்துவ அறக்கருத்து வகுப்புகளுக்கு 16 வயதிலிருந்து 30 வயது வரையான அறநெறி இளைஞர் பிரிவு மாணவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்களை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், வடபிராந்திய அலுவலகம், குருகுலம், பருத்தித்துறைவீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)

# உரியவிலை கிடைக்காததால் பூசணிச் செய்கையாளர் பாதிப்பு

கிளிநொச்சி, மார்ச் 13

கிளிநொச்சி, கண்டாவளை பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகரில் மேற்கொள்ளப்பட்ட பூசணிச் செய்கைக்குரிய நியாய விலை கிடைக்காததால் சிரமங்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



கல்மடுநகர் பகுதியில் சுமார் 2 ஏக்கரில் பூசணிச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 25 ஆயிரம் ரூபாவுக்கு பூசணி விதைக் கொள்வனவு செய்து செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது என்றும், உர வகைகளும் தனியாரிடம் இருந்து அதிக விலைக்குப் பெற வேண்டியிருந்தது என்றும் விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தற்போது அறுவடைக்காலம் வந்துள்ள நிலையில் ஒரு கிலோ பூசணியை 35 ரூபாவுக்கே கொள்வனவு செய்ய முற்படுகின்றனர். ஆயினும் சந்தையில் ஒரு கிலோ பூசணி 150 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது என்றும் விவசாயிகள் கூறுகின்றனர்.

மின்சாரச் செலவு, எரிபொருள் செலவு அதிகரித்துள்ள நிலையில் பெரும் சிரமத்தின் மத்தியில் பூசணிச் செய்கையை மேற்கொண்டிருந்த நிலையில் சந்தையில் உரியவிலை கிடைக்காததால் நட்டமடையும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமை தொடர்ந்தால் தோட்டச் செய்கையை செய்ய முடியாதுபோகும் என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர். சந்தையில் உரிய விலை கிடைப்பதற்கு அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-113)

# வடமாகாணத்தில் சீரான வானிலை!

வடமாகாணத்தில் இன்று சீரான வானிலை காணப்படும் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது: கிழக்கு, ஊவா மாகாணங்களிலும், பொலனறுவை, மாத்தளை மாவட்டங்களிலும் அடிக்கடி மழை பெய்யும். அதேவேளை மேல், சப்ரகமுவ மாகாணங்களிலும், கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பல பிரதேசங்களில் பிற்பகல் அல்லது இரவு வேளைகளில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும். அவ்வாறு இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும்.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடிய காற்றின் வேகம் மணித்தியாலத்துக்கு 25-35 கிலோ மீற்றர் வரை காணப்படக்கூடும். அத்தோடு காங்கேசன்துறையிலிருந்து மன்னார், புத்தளம் ஊடாக கொழும்பு வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும், காலி தொடக்கம் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் காற்றின் வேகம் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடும் - என்றுள்ளது. (ம)

# விவசாயிகளுக்கு இலவச உரம்

## அரசாங்கம் நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 13

விவசாயிகளுக்கு இலவசமாக யூரியா உரத்தை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

முதற்கட்டமாக வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, பொலநறுவை, அநுராதபுரம், மொனராகலை, பதுளை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய 8 மாவட்ட விவசாயிகளுக்கு யூரியா உரம் வழங்கப்படவுள்ளது.

இந்த மாவட்டங்களில் குறைந்த வருமானம் பெறும் விவசாயிகளுக்கு சிறுபோக பருவத்துக்காக தலா ஒரு யூரியா உரமூடை வழங்கப்படும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை- 36 ஆயிரம் மெற்றிக் தொன் ட்ரிப்பல் பொசுபேற்று அடங்கிய கப்பல் அடுத்த வாரம் நாட்டை வந்தடையவுள்ளது. ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் நிதியுதவியின் கீழ் பெறப்படும் இந்த உரம் எதிர்வரும் 17ஆம் திகதி நாட்டை வந்தடையும்.

எதிர்வரும் காலங்களில் நெற்பயிர்ச் செய்கைக்கு அத்தியாவசியமான இரசாயன உரமான டி.எஸ்.பி. உரத்தை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (ச-இ)



காரைநகர் பகுதியிலுள்ள பாடசாலைகளில் தரம் ஐந்தில் கல்வி கற்கும் 169 மாணவர்களுக்கு, இராணுவத்தினரால் கற்றல் உபகரணங்கள் சில அண்மையில் வழங்கப்பட்டன. (ம)

# அச்சுவேலிப் பகுதியில் வீடுகள் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், மார்ச் 13

அச்சுவேலி - பத்தமேனி பிள்ளையார் கோயில் பகுதியிலுள்ள வீடுகள் மீது கடந்த வெள்ளிக்கிழமை மாலை தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தடிகள், பொருள்களுடன் வந்த இனந்தெரியாத நபர்கள் வீட்டுத் தகரங்களை வெட்டிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது. முறைப்பாட்டுக்கமைய அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-14-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹிந்தானந்தவை தடுத்த அதிகாரிகள் இடைநிறுத்தம்

முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே வெளிநாடு செல்வதற்காக கடந்த வெள்ளிக்கிழமை இரவு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்குச் சென்றபோது, குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டு அதிகாரிகளால் தடுக்கப்பட்டுள்ளார்.

மத்துகம நீதிமன்றில் அவருக்கு வெளிநாட்டு பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி மஹிந்தானந்த அளுத்கமகே தனது வெளிநாட்டுப் பயணத்தை இரத்து செய்துள்ளார்.

எனினும், தமக்கு எதிராக மத்துகம நீதிமன்றத்தால் அவ்வாறான எந்தவொரு வழக்கோ அல்லது வெளிநாட்டு பயணத்தடையோ விதிக்கப்படவில்லை என மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கும் அவர் அறிவித்துள்ளார். குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் தெரிவிக்கையில்; தரவு அமைப்பில் ஏற்பட்ட பிழை காரணமாகவே இவ்வாறான தவறு ஏற்பட்டிருக்கலாம் என முதற்கட்ட விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் இன்று திங்கட்கிழமை மேலதிக விசாரணை நடத்தப்படும் என குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குடிவரவு, குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் இருவரை விசாரணைகள் முடியும் வரை பணி இடைநிறுத்தம் செய்ய குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நடவடிக்கை எடுத்துள்ளார். (அ-ஓ.இ)

## குடும்பத்தலைவர் மீது வாள்வெட்டு முயற்சி

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் இரவு குடும்பத் தலைவர் ஒருவரை வாளால் வெட்டுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் அவர் தலைக்கவசத்தால் தாக்குதலாளிகள் மீது தற்காப்புத் தாக்குதலை நடத்தி தப்பித்துள்ளார். கடைக்கு பொருள்களைக் கொள்வனவு செய்ய சென்ற குடும்பத்தலைவர் மீது 10 க்கும் மேற்பட்டோர் இணைந்து வாள்வெட்டுத் தாக்குதல் நடத்த முயற்சித்துள்ளனர். தற்பாதுகாப்புக்காக குடும்பத்தலைவர் தலைக்கவசத்தால் தாக்குதலாளிகளைத் தாக்கியுள்ளார். இதனையடுத்து வாள்வெட்டுக் குழுவினர் தப்பிச் சென்றுள்ளனர். அவர்கள் இரண்டு வாள்களை சம்பவ இடத்தில் விட்டுவிட்டுச் சென்றிருந்தனர். விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் 3 சந்தேகநபர்களை கைது செய்துள்ளனர். (அ-ஓ,113)

### மஹிந்த...

பொதுஜன பெரமுனவின் பரப்புரைக் கூட்டம் மொனராகலையில் நேற்று நடைபெற்றது. அந்தக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்களும் இந்தப் பரப்புரைக் கூட்டத்தில் பங்கேற்றனர். (அ-ஓ.இ)

### இனவழிப்பு...

சந்திப்பின்போது, எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு அவர் இவ்வாறு பதிலளித்தார்.

இந்தச் சந்திப்பு முடிவடைந்த பின்னர் ஊடகவியலாளர்களால், கடந்த காலங்களில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் கைது செய்யப்பட்டபோது அதற்கு எதிராக ஏன் குரல் கொடுக்கவில்லை? இப்போது நீங்கள் கைது செய்யப்பட்ட பின்னரே குரல் கொடுக்கின்றீர்கள் என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு வசந்த முதலிகே பதிலளிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ஓ,125)



### வடமாகாணத்தில் ஒரு வருடத்தில்

# 2,500 மில்லியன் ரூபாவுக்கு குடிதண்ணீர் விற்பனை

### நீர்ப்பாசனப் பொறியியலாளர் சர்வராஜா அதிர்ச்சித் தகவல்



**யாழ்ப்பாணம், மார்ச் 13**

**வடக்கு மாகாணத்தில் ஒரு வருடத்துக்கு அண்ணளவாக 2 ஆயிரத்து 500 மில்லியன் ரூபாவுக்கு குடிதண்ணீர் போத்தல்கள் விற்பனை செய்யப்படுகின்றன என்று வடமாகாண நீர்ப்பாசனப் பொறியியலாளர் ச.சர்வராஜா தெரிவித்துள்ளார்.**

அகில இலங்கை இந்துமாமன்ற யாழ். பிராந்திய நிலையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீர்ப் போத்தல் ஒரு லீற்றர் 50 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டபோது வடமாகாணத்தில் ஒரு வருடத்துக்கு ஆயிரத்து 200 மில்லியன் ரூபாவுக்கு குடிதண்ணீர் போத்தல்கள் விற்பனை செய்யப்பட்டன. இந்த வர்த்தகச் சுழற்சி இப்போது 2 ஆயிரத்து 500 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

வடமாகாணத்தில் நல்ல தண்ணியே இல்லையா? பிரேமதாஸ ஜனாதிபதியாகப் பதவி வகித்த போது அவருக்கு கிளிநொச்சி இயக்கச்சியிலிருந்து குடிதண்ணீர் உலங்கு வானூர்தியில் சென்றது. தற்போதுகூட இயக்கச்சியிலிருந்து பல குடிதண்ணீர் பவுஸர்கள் தென்னிலங்கைக்குச் செல்கின்றன.

அதில் ஒரு பவுஸர் குடிதண்ணீரை உரிய முறைப்படி போத்தல்களில் அடைத்து விற்பனை செய்தால்கூட வடமாகாணத்துக்கு எவ்வளவு வருமானத்தைப் பெறமுடியும்? இதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் வடமாகாணத்தில் வருடாந்தம் எத்தனையோ அபிவிருத்திகளை நாங்கள் மேற்கொள்ள முடியும்.

சுத்திகரிக்காமலேயே பருகக்கூடிய நல்ல தண்ணீர் இயக்கச்சியில் காணப்படுகிறது. எனினும், இயக்கச்சிக்குச் சென்றும் போத்தலில் அடைக்கப்பட்ட வெளியிடத்துக் குடிதண்ணீரைத்தான் குடிப்போம் என்ற மனநிலையில்தான் நாங்களிருக்கிறோம். நாங்கள் பழங்களைப் புறக்கணித்துவிட்டு சருகுகளைப் பொறுக்கிக் கொண்டிருக்கின்றோம். ஒரு குடிதண்ணீர்ப் போத்தல்கூட வடமாகாணத்தில் உற்பத்தி செய்யப்படவில்லை. 2 ஆயிரத்து 500 மில்லியன் ரூபாவும் வெளியேதான் செல்கிறது - என்றார். (ம-14,66)

## மாடுகளை களவாடிச்சென்ற கொழும்புவாசிகள் கைது

### உயிரிழந்த நிலையில் மாடும் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 13

மாடுகளைக் களவாடி இறைச்சிக்காகக் கொண்டு சென்ற 3 சந்தேகநபர்களைக் கைது செய்துள்ளதாக பலாலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

வளலாய் விமான நிலைய வீதியில் சுற்றுக்காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் வாகனம் ஒன்றை மறித்து சோதனையிட்டுள்ளனர்.

5 மாடுகளைக் களவெடுத்து சிறிய வாகனத்தில் இறைச்சிக்காகக் கொண்டு சென்றமை தெரியவந்தது. அதனையடுத்து வாகனத்திலிருந்து 3 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் இருவர் கொழும்பைச் சேர்ந்தவர்கள். ஒருவர் அச்சுவேலியைச் சேர்ந்தவர்.

மாடுகளை சிறிய இடத்தில் அடைத்துக் கொண்டு சென்றமையால் ஒரு மாடு உயிரிழந்துள்ளது. ஏனைய மாடுகள் சோர்வான நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக இரவு வேளைகளில் மாடுகள் திருடப்படும் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில், இந்தக் கைது நடவடிக்கை நடைபெற்றுள்ளது. (அ-ஓ,23)


வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
09 . 12 . 1960



மறைவு
11 . 02 . 2023

கடந்த (11.02.2023) சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

அமரர் சுப்பிரமணியம் மகேந்திரராஜா
(சிவன் ரவல்ஸ் உரிமையாளர்)

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (13.03.2023) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தொட்டிலடி, சங்கானை. குடும்பத்தினர்.

(CS 238941)1-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனிநாடு...

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினருக்கும், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினருக்கும் இடையிலான விசேட சந்திப்பு நேற்று மு.ப. 10 மணியளவில் யாழ்ப்பாணத்திலுள்ள 'ரில்கோ' விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே, யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் அ.விஜயகுமார், யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் ஜெல்சின், திறந்த பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.றிபாத், தென் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.திலான், ராஜரட்ட பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எம். அசான், ஜயவர்த்தனபுர, கொழும்பு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியங்களின் இணைப்பாளர் ரி.பி.பிரசாந் மற்றும் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய உறுப்பினர்கள், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

'தமிழ் மக்களின் பிரச்சினை என்பது தனியே எரிவாயு அடுப்பு, மின்சாரம் என்பனவற்றுக்குள் எமது கோரிக்கைகள் உள்ளடங்கவில்லை. பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பதுகூட எமது தமிழ்மக்களின் பிரச்சினைகளின் ஒரு பகுதியாகவே இருக்கின்றது. நீங்கள் (வசந்த முதலிகே) ஆறுமாத காலம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்ட பின்னர் தான் இது குறித்து ஆழமாகப் பார்க்கின்றீர்கள். ஆனால், எமது பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் காணாமல் ஆக்கப்பட்டும், சுட்டுப் படுகொலையும் செய்யப்பட்டுமுள்ளார்கள். போராட்டம் என்பது எமக்குப் புதிதல்ல. பயங்கரவாதத் தடைச் சட்டம் சிங்களவருக்கு எதிராகவும் திசை மாறும் போது தான் சிங்களவர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டம் பற்றி புரிந்து கொள்வார்கள் என்று அன்று கூறியது இன்று நிச்சயமாகியுள்ளது. எமது பிரச்சினைகளைத் தெற்குக்குக் கொண்டு சென்று இனிவரும் போராட்டங்களின் போது இதனையும் முன்னிலைப்படுத்துகின்றபோது எமது நிலைப்பாடுகள் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துடனான உறவுநிலைகளை ஆரோக்கியமாக்கும்' என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரால் தெரிவிக்கப்பட்டது.

மேலும், 'எமது பிரதிநிதிகள் இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் மாணவர்களிடையே தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்துப் புரிதலை ஏற்படுத்தும் செயற்றிட்டத்தை வரவேற்கின்றோம். இதேநேரம் முறைமையான கலந்துரையாடல் ஒன்றை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துடன் மேற்கொண்டு, அதன் பின்னர் தொடர்ச்சியாகத் தமிழ் மக்களின் அபிலாஷைகள் மற்றும் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குரல் கொடுக்கின்ற பொழுது அது ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்று. மாணவர்களுக்கூடாகவே நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும்' என்றும் குறிப்பிட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் சிங்கள மாணவர்களின் தெளிவுபடுத்தலுக்காக பின்வரும் விடயங்கள் அடங்கிய முன்மொழிவு ஒன்றையும் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரிடம் கையளித்தனர்.

**கையளிக்கப்பட்ட முன்மொழிவில்,**

'இன்று பொருளாதாரப் பிரச்சினையாலும், சிறிலங்கா அரசின் அடக்குமுறையாலும் பாதிக்கப்பட்டுள்ள தென்பகுதி சிங்களத் தரப்பினர், தற்போது வடக்கு - கிழக்கு தமிழ் மக்களை அணுகத் தொடங்கியுள்ளனர். அவ்வாறு அணுகும் எந்தத் தரப்பினரும் தமிழ் மக்களின் இனப்பிரச்சினையின் அடிப்படைகளைப் புரிந்து கொள்வதுடன் பின்வரும் விடயங்களில் தமது உறுதியான நிலைப்பாட்டினை வெளிப்படுத்தவேண்டும்.

**1.** வடக்கு-கிழக்கைத்தாயகமாகக்கொண்ட தமிழ் மக்கள் தனித்துவமான மொழி, மதம், கலாசார அடையாளங்களை கொண்ட தனித்துவமான தேசிய இனம் என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

**2.** ஒன்றிணைத்த வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களின் பாரம்பரிய மரபுவழித் தாயகம் என்பதை ஏற்றுக் கொள்ளவேண்டும்.

**3.** தமிழினம் தன்னாட்சிக்கு உரித்துடைய இனம் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**4.** தேசிய இனத்துக்குரிய சுயநிர்ணயம், தமிழினத்துக்கும் உரித்துடையது என்பதை ஏற்றுக்கொள்வதுடன், அதன்வழி தமது அரசியல் தலைவிதியைத் தீர்மானிக்கும் உரிமையும் அவர்களுக்குண்டு என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

**5.** தமிழினம் தமது அரசியல் தலைவிதியைத் தீர்மானிக்க, சர்வதேசத்தால் நடத்தி கண்காணிக்கப்படும் சர்வஜன வாக்கெடுப்பினூடாக சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும் என்பதை ஏற்றுக் கொள்ளவேண்டும்.

**6.** தமிழினத்தின் மீது காலகாலமாக நிகழ்த்தப்பட்ட இனவழிப்பு, இனப்படுகொலை மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச நீதிப் பொறிமுறையினூடாக நீதி வழங்கப்படவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**7.** தமிழர்தாயகத்தில்நிலைகொண்டுள்ள சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவம் உடனடியாக வெளியேற்றப்படவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

**8.** ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழரின் நிலங்கள் உடனடியாக விடுவிக்கப்படவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**9.** சிறிலங்கா அரசியல் அமைப்பின் 6ஆம் திருத்தச் சட்டம் (தனிநாடு கோருவது தண்டனைக்குரிய குற்றம்) நீக்கப்பட்டு தமிழ் மக்கள் தமது அரசியல் அபிலாஷையை வெளிப்படுத்தும் அரசியல் வெளி ஏற்படுத்தப்படவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

**10.** பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட்டு, நீண்டகாலம் சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் உடனடியாக எவ்வித நிபந்தனைகளுமின்றி விடுவிக்கப்படவேண்டும் என்பதை ஏற்றுக் கொள்ளவேண்டும். மேற்படி விடயங்கள் தொடர்பில் தீர்க்கமான முடிவை வெளிப்படுத்தினாலேயே, இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வையும் அதன்வழி பொருளாதாரப் பிரச்சினையையும் முடிவுக்கு கொண்டுவரமுடியும் - என்று குறிப்பிட்டுள்ளனர். (அ-ஓ,5,125)

## தபால்மூல...

தபால்மூல வாக்களிப்புக்கான புதிய திகதிகளை அறிவிக்க நேரிடும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் ஏப்ரல் 25ஆம் திகதி நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தபால்மூல வாக்களிப்புக்களுக்கு எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதிவரை காலம் குறிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் த[illegible] அச்சிடுவதற்கு [illegible] இல்லை என அரசாங்க அச்சகப் பணிப்பாளர் கங்காணி லியனகேயும் தெரிவித்துள்ளார். இந்த சூழ்நிலையில் நாளை மறுதினம் புதன்கிழமைக்குள் தமது ஆணைக்குழு 500 மில்லியன் ரூபாவை முற்பணமாகப் பெற்றுக் கொள்ளாத பட்சத்தில் தபால்மூல வாக்களிப்புக்கான புதிய திகதிகள் அறிவிக்கப்படவேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் நிமால் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கான ஆயத்தப் பணிகளை மேற்கொள்வதற்கு இந்த மாத இறுதி வரை திறைசேரியிலிருந்து மொத்தம் ஆயிரத்து 100 மில்லியன் ரூபா தேவைப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

இதேவேளை- எதிர்வரும் 20ஆம் திகதிக்குள் பணம் கிடைக்காவிட்டால், தாம் நீதிமன்றத்துக்குச் சென்று தமக்கான நிதியை திறைசேரி ஒதுக்கீடு செய்யாதது குறித்து முறையிடவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் வாக்குச்சீட்டு அச்சிடும் பணிக்காக 533 மில்லியன் ரூபா கோரப்பட்டபோதிலும், அது கிடைக்கவில்லைஎன்பதால்அச்சடிக்கும்பணியை முன்னெடுக்க முடியவில்லை என்று அரச அச்சகப் பணிப்பாளர் கங்காணி லியனகே தெரிவித்துள்ளார்.

தேர்தல் தொடர்பான 2 ஆயிரத்து 500 அச்சுப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய நிலையில், இதுவரை 54 பணிகள்மட்டுமேநிறைவேற்றப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார். (அ-ஓ,இ)

## உள்ளூராட்சிசபைத்...

இறுதி முடிவு எடுக்கும். நாட்டின் நலன் கருதியும், மக்கள் நலன் கருதியும் நாடாளுமன்றம் எடுக்கும் தீர்மானத்தை எந்தத் தரப்பும் சவாலுக்குட்படுத்த முடியாது - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலுக்காக வரவு - செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியைத் தடுப்பதற்கு எதிராக நீதிமன்றம் விதித்த இடைக்காலத் தடை, நாடாளுமன்ற சிறப்புரிமையை மீறும் செயல் என்று ஆளும் கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் தெரிவித்திருந்தனர். இதனால் நாடாளுமன்றத்தில் பெரும் சர்ச்சை ஏற்பட்டிருந்தது.

நாடாளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி நீதிமன்றத்தின் சுயாதீனத்திலும், தேர்தல்கள் ஆணைக்குழுவின் சுயாதீனத்திலும் ஆளும் கட்சி தலையீடு செய்வதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியிருந்தன.

இந்த நிலையில் தேர்தலுக்கான நிதியை விடுவிக்குமாறு கோரி திறைசேரி செயலருக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அனுப்பிய கடிதத்துக்குப் பதிலளித்த திறைசேரியின் செயலர், நிதியை விடுவிக்குமாறு ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் அனுப்பியுள்ளதாகக் குறிப்பிட்டிருந்ததுடன் அவரது அனுமதியை எதிர்பார்த்திருப்பதாகவும் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதனையடுத்து, நிதியை விடுவிக்குமாறு கோரி தேர்தல்கள் ஆணைக்குழுவால் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு நிலையில், உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் கொழும்புச் செய்தியாளர் ஒருவர் ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பியபோது,

'தேர்தல் தொடர்பில் எனது நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் இல்லை. நான் திரும்பவும் சொல்கின்றேன் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட அதியுயர் சபையான நாடாளுமன்றமே தேர்தல் தொடர்பில் இறுதி முடிவு எடுக்கும். நாட்டின் நலன் கருதியும் மக்கள் நலன் கருதியும் நாடாளுமன்றம் எடுக்கும் தீர்மானத்தை எந்தத் தரப்பும் சவாலுக்குட்படுத்த முடியாது' என்று ரணில் விக்கிரமசிங்க பதிலளித்துள்ளார். (அ-ஓ,5,22)

## திருடப்பட்ட...

இந்த நிலையில் சுன்னாகம் பொலிஸாரால் உடுவில் 'லவ் லேன்'பகுதியில் இலக்கத் தகடு அற்றநிலையில் குறித்த மோட்டார் சைக்கிள் நேற்றுக்காலை மீட்கப்பட்டுள்ளதோடு மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்தவர் தப்பி ஓடியுள்ளார்.

இலக்கத்தகடு அற்ற மோட்டார் சைக்கிளை ஒருவர் செலுத்திச் செல்வதை அவதானித்த சுன்னாகம் பொலிஸார், அவரைப் பின்தொடர்ந்து சென்றபோது சந்தேகநபர் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

பொலிஸார் மோட்டார் சைக்கிளை பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்ற நிலையில், மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் நேற்றுக் காலை மோட்டார் சைக்கிளை நேரில் பார்வையிட்டு உறுதிப்படுத்தினார். அதையடுத்து யாழ்ப்பாண பொலிஸாரிடம் மேலதிக விசாரணைக்காக மோட்டார் சைக்கிள் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அத்தோடு குறித்த திருட்டில் ஈடுபட்ட சந்தேகநபர்கள் பொலிஸாரால் அடையாளம் காணப்பட்டுள்ளனர். விரைவில் அவர்கள் கைது செய்யப்படுவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை- அன்றையதினம் குடாநாட்டில் மேலும் 3 மோட்டார் சைக்கிள்கள் திருடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஓ,5)

## போராட்டக்காரர்களோடு...

களுக்கு உதவி புரிபவர்களுமே அரசு மீதும், பொலிஸார் மீதும் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். ஆனால், உண்மை நிலைமை மக்களுக்குப் புரியும் - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த வாரம் இடம்பெற்ற போராட்டங்களின்போது காலாவதியான கண்ணீர்ப்புகைக்குண்டு பயன்படுத்தப்பட்டதாகவும், இரசாயனங்கள் பயன்படுத்தப்பட்டதாகவும், மலக்கழிவு நீரைப் பயன்படுத்தியே போராட்டக்காரர்கள் மீது நீர்தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் தொடர்பில் கொழும்பு செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

'ஆர்ப்பாட்டக்காரர்கள் தடை உத்தரவுகளை மீறிச் செயற்படும் போதும், அவர்கள் வன்முறைகளில் ஈடுபடும் போதும் நீர்த்தாரைப் பிரயோகம் செய்து, கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசி அவர்களைக் கலைக்கும் முழுச் சுதந்திரம் பொலிஸாருக்கு உண்டு. அதற்கு எதிராக எவரும் போர்க்கொடி தூக்க முடியாது. பொலிஸாரின் நீர்த்தாரைப் பிரயோகம் மற்றும் கண்ணீர்ப்புகைக் குண்டுகள் தொடர்பில் சில தரப்பினரால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை அடியோடு மறுக்கின்றேன்' என்றும் அவர் தெரிவித்தார். (அ-ஓ,5,22)

## எரிபொருள்...

டொலரின் பெறுமதி வீழ்ச்சியுடன் எரிபொருள் இறக்குமதியில் கிடைக்கும் நிவாரணத்தை மக்களுக்கு வழங்க எதிர்பார்ப்பதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விலைச் சூத்திரத்தின்படி, ஒவ்வொரு மாதமும் முதல் நாள் எரிபொருள் விலையில் திருத்தம் செய்யப்படவுள்ளது.

இதன்படி எதிர்வரும் ஏப்ரல் மாதம் இடம்பெறவுள்ள விலைத் திருத்தத்தில் எரிபொருள் விலையைக் குறைக்க எதிர்பார்த்துள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார். (அ-ஓ,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உ/த பரீட்சை பெறுபேறு மேலும் தாமதமடையும்!

கொழும்பு. மார்ச் 13
உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்வோரின் வேலைநிறுத்தம் காரணமாக பெறுபேறுகள் மேலும் தாமதமடையும் என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாடளாவிய ரீதியில் ஒரு வாரத்துக்கு தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தை தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து முன்னெடுத்து வருகின்றன. இதனால் உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால் பெறுபேறுகளை வெளியிடுவது இரண்டு வாரங்கள் தாமதமாகும் - என்றார். (ச-இ)

## இறக்குமதி தாமதம் ஆராய இந்தியா பயணம்!

கொழும்பு.மார்ச் 13
இந்தியாவிலிருந்து முட்டை இறக்குமதி செய்வதில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்து ஆய்வு செய்வதற்கு அதிகாரி ஒருவர் இந்தியா சென்றுள்ளார் என வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

முட்டை விலையைக் கட்டுப்படுத்தும் முகமாக இந்தியாவிலிருந்து 2 மில்லியன் முட்டைகள் இறக்குமதி செய்யப்படவுள்ளது. எனினும் இறக்குமதிக்கு இந்திய அதிகாரிகள் இன்னமும் தரச்சான்றிதழை வழங்காததால் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில் இறக்குமதியில் ஏற்பட்டுள்ள தாமதம் தொடர்பில் ஆராய்வதற்காகவே மேற்படி அதிகாரி இந்தியாவுக்குச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

**வாகனம் வாடகைக்கு**
குளிர் ஊட்டப்பட்ட
**கயஸ் வாகனம்** வாடகைக்கு விடப்படும். (cs1093) (2:6)
**077 605 7480**

DHL வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
சகல நாடுகளுக்கும் கடிதங்கள்
3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. Road, Jaffna.
0777 55 45 28

குறிப்பு: வேலையாட்கள் தேவை.

## கொழும்பு விலையில் 30% விலை கழிவுடன் யாழ்ப்பாணத்தில் விற்பனை


- அழகுசாதன அன்பளிப்பு விளையாட்டு பொருட்கள்.
- கவரிங் நகைகள், சோடினை பொருட்கள், பாடசாலை உபகரணங்கள்.
- மணிக்கூட்டு வகைகள், கிறீம் வகைகள்.
- பிளாஸ்ரிக் பொருட்கள், பாட்டா வகைகள்.
- தையல் உபகரணங்கள்.
- சில்வர், மாபிள், கிளாஸ் வகைகள்.

✔ கொழும்பு விலையில் விற்பனைக்கு.

இல.26/01
ஜிம்மா பள்ளிவாசல் வீதி,
யாழ்ப்பாணம்.
**077 468 3354**
சரவணபவன் பான்சி கவுஸ்
உரிமையாளர்
தே.கலைத்தாசன்(கரன்)

## மரண அறிவித்தல்

தோற்றம்
17 • 02 • 1940



மறைவு
12 • 03 • 2023

## இராமலிங்கம் காசிராசலிங்கம்

(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

மாதகல் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் காசிராசலிங்கம நேற்று (12.03.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பண்டிதர் இராமலிங்கம் செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி உடையார் வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜீவலிங்கம் (யாழ்பாவாணன்), யோகலிங்கம், அமரர் ஞானலிங்கம், இந்திரலிங்கம் (மானிப்பாய் பிரதேச சபை), கோமளாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியபாமா, இந்திராவதி, சிவப்பிரகாஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆரணி, விக்கினேஸ், கிருஷ்னவி ஆகியோரின் அன்புப் பேரனும், அமரர் திருஞானாம்பிகை, நடராசலிங்கம், தேவலோகேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2023) திங்கட்கிழமை காலை 08.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதகல் போதி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

070 344 5441
077 411 5540

தகவல்:
குடும்பத்தினர்
(cs23880) (2.6)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தாவடியில் 5 பரப்புக் காணி விற்பனைக்கு.
மூன்று பரப்பாகவும், இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
K.K.S. வீதியில் இருந்து இரண்டாவது காணி.
தாவடி சந்தியிலிருந்து 100 M தூரத்தில்.
தொடர்பு:- 076 43 65 814
(CS 1150)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 72 பரப்புக் காணி விற்பனைக்கு.

- பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 KM தூரம்
- குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
- புத்தூர்-சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் இருந்து 500 M தூரத்தில்.
- நன்னீர் ஊற்று நிலம்.
- விவசாயம் செய்யவும், வீடு கட்டவும் உகந்த காணி.
- ஒரு பரப்பின் விலை 1 இலட்சம் ரூபா மட்டும்.
- 03 பரப்பாக பிரித்துக்கொடுக்கப்படும்.

தொடர்பு:
**076 755 8606**
**074 318 7263**
(CS 23890) (1-6)

## வேலைவாய்ப்பு




யாழில் இயங்கிவரும் பிரபல நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பம் எதிர்பார்க்கப்படுகின்றது.

1) எழுதுவினைஞர் (Clerk)
2) கணக்கு எழுதுவினைஞர் (Accounts Clerk)

ஆர்வமுள்ளவர்கள் இன்று (13.03.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00-02.00 மணிவரை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமுகம் தரவும்.

**உதயன் பணிமனை**
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அனைத்துவித கணினிகள் மற்றும் கணினிசார் பொருட்கள் விற்பனை மற்றும் பழுதுபார்த்தல்

## NALIN EXCLUSIVE

- Install Windows OS for Macbook
- Apple Mac Software Solution
- Laptop Motherboard Chip Level Repair
- Laptop Repair
- Desktop Repair
- UPS Repair and Battery Replacement
- Fingerprint Machine Installation & Repairing



NALIN Information Technologies (Pvt) Ltd
Computers of the North
No.51, Stanley Road, Jaffna. (Infront of BOC)
076 359 4359 | 021 221 0404

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.